NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu,* p3
**Date:** 26 January 2015

# ‘கசினோ’ திறப்பு நீங்கா இடம் பிடித்த நிகழ்வு

கடந்த 2010ஆம் ஆண்டில் சிங்கப்பூரில் இரண்டு சூதாட்டக் கூடங்கள் (கசினோ) திறக்கப்பட்டது சிங்கப்பூரர்கள் ஆக அதிகமாக நினைவில் கொண்ட நிகழ்வாக கருதுகின்றனர்.

21 வயதைக் கடந்த 1,500க்கும் மேற்பட்ட சிங்கப்பூரர்களிடையே சிங்கப்பூர் கொள்கை ஆய்வுக் கழகம் நடத்திய ஆய்வில் இது தெரிய வந்துள்ளது.

1819ஆம் ஆண்டு நவீன சிங்கப்பூர் கண்டுபிடிக்கப்பட்ட நிகழ்வு முதல் அண்மைய 2011ஆம் ஆண்டு பொதுத்தேர்தல் உள்ளிட்ட சிங்கப்பூரின் வரலாற்றுச் சிறப்புமிக்க 50 சம்பவங்கள் ஆய்வில் கலந்துகொண்டோரிடம் முன்வைக்கப்பட்டன. இந்த சம்பவங்களில் அண்மைய சங்பவங்களையே அவர்கள் அதிகமாக நினைவில் கொண்டிருந்தனர்.

சூதாட்டக் கூடங்களின் திறப்பு முதல் இடத்தையும், 2003இன் சார்ஸ் தொற்றுநோய் சம்பவம் இரண்டாம் இடத்தையும் 2011ஆம் ஆண்டில் ஏற்பட்ட பெரும் எம்ஆர்டி ரயில் சேவைத் தடை மூன்றாம் இடத்தையும் பிடித்தன. தீவிரவாதியான மாஸ் செலமாட் சிங்கப்பூர் சிறையிலிருந்து தப்பியது நான்காவது இடத்தையும் மலேசியாவிடமிருந்து பிரிந்தபோது அப்போதைய பிரதமர் லீ குவான் இயூ தேசிய தொலைக்காட்சியில் அழுத காட்சி 9ஆவது இடத்தையும் பிடித்தன.

தேசிய வளர்ச்சி, சமூக வேற்றுமைகளை வெளிப்படுத்தும் சம்பவங்கள், தேசிய தாக்குப்பிடிக்கும் தன்மை ஆகிய மூன்று விரிவான தலைப்புகளின் கீழ் ஆய்வில் கலந்துகொண்டோர் தேர்ந்தெடுத்த முதல் 35 நிகழ்வுகளைப் பிரிக்கலாம் என ஆராய்ச்சியாளர்கள் கணித்துள்ளனர்.

எனினும், ஆக அதிகமான விழிப்புணர்வை ஏற்படுத்திய சம்பவங்களே சிங்கப்பூரின் ஆக முக்கியமான வரலாற்று நிகழ்வுகள் என்றில்லை என்பதையும் ஆராய்ச்சியாளர்கள் சுட்டினர்.

சிங்கப்பூரின் ஆக முக்கியமான நிகழ்வுகளில் வீடமைப்பு வளர்ச்சிக் கழகம் உருவானது, தேசிய உறுதிமொழி உருவானது, சாங்கி விமான நிலைய திறப்பு, எம்ஆர்டி ரயில் சேவையின் அதிகாரபூர்வ திறப்பு, சார்ஸ் நோய் போன்றவை முக்கியமான நிகழ்வுகள் பட்டியலில் முன்னிலை வகித்தன.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.